

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண் - 15

## சுற்றுச்சூழல்

## அறிவிப்புகள்

## 2015 - 2016

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

மானியக் கோரிக்கை எண்–15

சுற்றுச்சூழல்

# அறிவிப்புகள்
# 2015–2016

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்
சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை
# 2015–2016 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்
## சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு

**1. சுற்றுச்சூழல் மற்றும் சூழல் பாதுகாப்பு முக்கியத்துவத்தினை விளக்கும் வகையில் 5 குறும்படங்கள் / விளம்பரங்கள் தயாரித்தல்.**

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** இயற்கை வளங்களை நியாயமான முறையில் பயன்படுத்தி, சூழலின் முக்கியத்துவத்தினையும் அதனைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்தும், அதே சமயம் உள்ளூர் மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியினை பாதிக்காத வகையில் நீடித்து நிலைக்கும் ஆரோக்கியமான சூழலை உருவாக்கி அதனை வருங்கால சந்ததியினருக்கு விட்டுச்

செல்ல வேண்டிய அவசியம் குறித்தும் மாணவ சமுதாயத்தினருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், நிலமாசு, நீர்மாசு, காற்றுமாசு, தொழிற்சாலை மாசு மற்றும் சூழல் முக்கியத்துவம் குறித்து 5 பிரிவுகளில் தனித்தனியே 5 குறும்படங்கள் / விளம்பரங்கள் மொத்தம் ரூ.5 கோடி செலவில் நடப்பு நிதியாண்டில் தயாரித்து தொலைக்காட்சிகள் மூலம் ஒளிபரப்பப்படும்.



**2. ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சியிலுள்ள கனிராவுத்தர் குளத்தினை சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறு மேம்படுத்துதல் மற்றும் அழகுபடுத்துதல்.**

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சியிலுள்ள கனிராவுத்தர் குளம்/ ஏரியை (14.40 ஹெக்டர்) ரூ.10 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறு புனரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஏரியினை தூர் வாரி சுற்றிலும் கரையமைத்தல், ஏரியின் கரையில் புல் கற்றைகளை வளர்த்து கரைகளை பலப்படுத்துதல், ஏரியைச் சுற்றி வேலியமைத்தல், மரக்கன்று நடுதல், நடைபாதை அமைத்தல் மற்றும் இதரப்பணிகள்

மேற்கொள்ளப்படும். இப்பணிகளை மேற்கொள்வதன் மூலம் இந்த ஏரியின் கொள்ளளவு அதிகமாவதுடன், அந்த ஏரிப்பகுதி ஒரு பொழுதுபோக்கு மையமாகவும் விளங்கும்.

இத்திட்டத்தின்படி நடப்பு நிதியாண்டில் ரூ.4 கோடி செலவில் முதற்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதனால் ஏரியின் அருகில் உள்ள இடங்களின் நிலத்தடி நீர் மட்ட அளவும் பாதுகாக்கப்படும்.



### 3. புண்ணியத்தலங்களுக்கு செல்லும் யாத்திரிகர்கள் சுத்தமான, பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான பயணம் மேற்கொள்ள ஏதுவாக தமிழ்நாட்டிலுள்ள 11 புண்ணியத் தலங்களில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

தமிழ்நாட்டில் பல வரலாற்று மற்றும் மத முக்கியத்துவம் வாய்ந்த புனிதத் தலங்கள் உள்ளன. இவைகளில் முதல் கட்டமாக ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம், திருத்தணி, பழனி, திருச்செந்தூர், தஞ்சாவூர், மருதமலை, மதுரை, சிதம்பரம், சமயபுரம் மற்றும் சதுரகிரி ஆகிய 11 நகரங்களில் உள்ள முக்கியமான கோயில்களிலும், கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்துக் கொள்வது குறித்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள், இந்து அறநிலையத் துறை மற்றும் தன்னார்வ

தொண்டு நிறுவனங்கள் ஒத்துழைப்போடு பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி இத்தலங்களை சுற்றுச்சூழல் மேம்படுத்தப்பட்ட புண்ணிய தலங்களாக மாற்ற **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம்புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** நடப்பு நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இப்பணிகளுக்காக தலம் ஒன்றுக்கு ரூ.5.00 இலட்சம் வீதம் 11 தலங்களுக்கு மொத்தம் ரூ.0.55 கோடி செலவிடப்படும்.



## 4. தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 2 இடங்களில் புதிய மாவட்ட அலுவலகங்கள் ஏற்படுத்துதல்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாவட்ட அளவில் 34 அலுவலகங்களை ஏற்படுத்தியுள்ளது. அவற்றுள் தர்மபுரி, பெரம்பலூர், திருவாரூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இயங்கும் தொழிற்சாலைகள் முறையே ஒசூர், அரியலூர், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் மாவட்ட அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மேற்கூறிய 4 மாவட்ட அலுவலகங்களும், இரண்டுமாவட்டத்திற்குட்பட்ட எல்லைகளில் உள்ள தொழிற்சாலைகளை கண்காணிக்க சிரமம் ஏற்படுவதாலும், பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் மாசு குறித்த நல்ல விழிப்புணர்வின் காரணமாக அதிக புகார்கள் பெறப்படுவதாலும், மாவட்ட ஆட்சித்

தலைவர் அளவில் நடைபெறும் கூட்டங்கள் மற்றும் சட்டமன்ற குழுக்களின் ஆய்வுகள், நீதிமன்ற வழக்குகள், இசைவாணை அளிப்பதற்கான பணிகள் மற்றும் தொழிற்சாலைகள் கண்காணிப்பு போன்ற பணிகள் அதிக வேலை பளுவினை ஏற்படுத்தியுள்ளன. எனவே, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** ரூ.1.50 கோடி செலவில் தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் புதிய மாவட்ட அலுவலகங்களை ஏற்படுத்துவதோடு இவ்விரு அலுவலகங்கள் ஒவ்வொன்றிற்கும் தேவையான சுற்றுச்சூழல் பொறியாளர், உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், 2 உதவி பொறியாளர், உதவி மேலாளர், உதவியாளர், அலுவலக உதவியாளர், ஓட்டுநர் ஆகிய 16 பணியிடங்கள் மற்றும் அலுவலகத்திற்கு தேவையான உபகரணங்களுடன் ஏற்படுத்தப்படும்.



## 5. பொது மக்களின் சுற்றுச்சூழல் குறித்த புகார் மீது துரித நடவடிக்கை எடுக்க ஏதுவாக புதிய மென்பொருள் வசதி ஏற்படுத்துதல்.

தொழிற்சாலைகளால் ஏற்படும் மாசினை கண்காணிப்பது மற்றும் கட்டுப்படுத்துவது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் முக்கிய பணியாகும். தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் சுற்றுச்சூழல் மாசு குறித்த புகார்களை தற்பொழுது பொது மக்கள் எழுத்து பூர்வமாக கடிதம் மூலம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் அல்லது வாரியத்தின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வருகின்றனர். புகார்கள் பெறப்பட்டவுடன் கள அலுவலர்கள் புகார்களை ஆய்வு செய்து உரிய மேல் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இப்பணி முடிவடைய இரு வார காலம் ஆகின்றது. இக்கால அவகாசத்தை குறைக்கவும் பொது

மக்கள் சுற்றுச்சூழல் குறித்த புகார்களை இணையம் மூலம் உடனுக்குடன் மாவட்ட பொறியாளர்களுக்கு அனுப்ப ஏதுவாக **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** நடப்பு நிதியாண்டில் ஒரு புதிய மென்பொருளை ரூ.0.25 கோடி செலவில் உருவாக்கி நடைமுறைபடுத்தப்படும். இந்த மென்பொருளைப் பயன்படுத்துவதன் மூலம் தலைமை அலுவலகத்திலிருந்து மாவட்ட வாரியாக பெறப்படும் புகார் குறித்த விவரங்கள், நிலுவையில் உள்ள புகார்களின் விவரங்கள், நடவடிக்கை எடுக்க வேண்டிய அதிகாரிகளின் விவரங்கள் போன்றவை கண்காணிக்கப்படும். இதன் மூலம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் செயல்திறன் மேம்படுத்தப்படும்.



## 6. தீங்கு விளைவிக்கும் கழிவுகள், மருத்துவ கழிவுகள் மற்றும் நகரத் திடக்கழிவுகள் விதிகளின்கீழ் இணையம் மூலமாக அங்கீகாரம் வழங்குவதற்கு புதிய மென்பொருளை உருவாக்குதல்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஜனவரி 2015 ஆம் ஆண்டு முதல் இணையம் மூலம் இசைவாணை வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. தற்பொழுது தீங்கு விளைவிக்கும் கழிவுகள் (மேலாண்மை, கையாளுதல் மற்றும் எல்லையினை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், மருத்துவ கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் மற்றும் நகரத் திடக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளின் கீழ் தொழிற்சாலைகளுக்கான அங்கீகாரங்கள் கோப்புகள் மூலம் பரிசீலிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. இதனை துரிதபடுத்த

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** ஒரு மென்பொருள் நடப்பு நிதியாண்டில் ரூ.0.30 கோடி செலவில் அறிமுகப்படுத்தப்படும். இதன் காரணமாக தொழிற்சாலைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் அனைத்தும், சுற்றுச்சூழல் சட்டங்களின் கீழ் பெற வேண்டிய அனைத்து அங்கீகாரங்களையும் இணையம் மூலமாக பெறுவர். இதன் காரணமாக விண்ணப்பங்களை பரிசீலிக்க எடுத்துக் கொள்ளும் கால அவகாசம் குறைக்கப்படும்.

மேலும், தமிழகம் முழுவதும் பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களின் நிலையினை வாரிய உயர் அதிகாரிகள், எந்நேரமும் அறிந்து கொள்ளவும் இம்மென்பொருள் உதவியாக இருக்கும். இதன் காரணமாக இந்தியாவிலேயே இசைவாணைகள் மற்றும் அங்கீகாரத்தினை விரைவாக வழங்கும் முன்னோடி வாரியமாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் விளங்கும்.



## 7. வேலூர், திருச்சி மற்றும் திருநெல்வேலியில் உள்ள மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களை மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களாக தரம் உயர்த்துதல்.

வேலூர், திருச்சி மற்றும் திருநெல்வேலியில் இயங்கி வரும் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் அம்மாநகரங்களின் வழியாக செல்லும் பாலாறு, காவிரி மற்றும் தாமிரபரணி ஆகிய நதிகளை கண்காணிக்கும் பொருட்டு **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** ரூ.1.50 கோடி செலவில், மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களாக தரம் உயர்த்தப்படும்.

மேற்படி ஆய்வகங்கள் அபாயகரதன்மை மற்றும் நுண்ணுயிர் போன்ற காரணிகளை உள்ளடக்கிய காற்று மற்றும் நீர் மாதிரி

சோதனைகளை மேற்கொள்ள உள்ளது. இதற்குத் தேவையான உபகரணங்கள் நிறுவப்பட உள்ளன. இதற்கு தேவையான மனித ஆற்றலாக ஒவ்வொரு ஆய்வகத்திற்கும் ஒரு உதவி இயக்குநர் தலைமையில், இரு துணை தலைமை விஞ்ஞான அலுவலர்கள், நான்கு சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள், இரு ஆய்வக உதவியாளர்கள், இரு களப்பணியாளர்கள் உள்ளடக்கிய 33 பணியிடங்களை புதிதாக உருவாக்கி மேற்படி மூன்று ஆய்வகங்களும் தரம் உயர்த்தப்படும்.



## 8. தொழிற்சாலைகளுக்கு இசைவாணை மற்றும் அங்கீகாரங்களை இணையம் மூலம் துரிதமாக வழங்க ஏதுவாக அனைத்து பொறியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் மடிக்கணினிகள் வழங்குதல்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஜனவரி 2015 ஆம் ஆண்டு முதல் இணையம் மூலம் இசைவாணை வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. இதன் மூலம் தொழிற்சாலைகள் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981–ன் கீழ் தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை வழங்குதல், தொழிற்சாலையினை இயக்குவதற்கான இசைவாணை வழங்குதல், இசைவாணையினை புதுப்பித்தல் போன்ற

பணிகளை இணையம் மூலம் வழங்கி வருகின்றது. **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** இப்பணிகள் வருடத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் விரைவாகவும், தடையின்றியும் வழங்க ஏதுவாக இந்தியாவிலேயே முதல் வாரியமாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், உயர் அதிகாரிகள் மற்றும் அனைத்து பொறியாளர்களுக்கும் மடிக்கணினிகள் நடப்பு நிதியாண்டில் ரூ. 2.50 கோடி செலவில் வழங்கப்படும். இதனால் இசைவாணைகள் வழங்கும் கால அளவானது கணிசமாக குறையும், மேலும் இது தொழிற்சாலைகளின் விண்ணப்பப் படிவங்களின் நிலையினை வாரிய உயர் அதிகாரிகள் கண்காணிக்க பேருதவியாக இருக்கும். இதன் மூலம் வாரியத்தின் செயல்திறன் மேம்படுத்தப்படும்.



## 9. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு தொழிற்சாலை ஆய்வு மற்றும் புகார் புலனாய்வின் போது உதவும் வகையில் கையடக்க மாசு அளவிடும் கருவிகள் வழங்குதல்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் முக்கிய பணியானது தொழிற்சாலைகளை ஆய்வு செய்தல் மற்றும் தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள மாசு கட்டுப்பாடு தொடர்பான சுத்திகரிப்பு அமைப்புகள் தொடர்ந்து இயங்குகின்றனவா என கண்காணித்தல் ஆகும். வாரிய அதிகாரிகள் தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ளும் போதும், புகார்கள் மீது புலனாய்வு மேற்கொள்ளும் போதும், கழிவுநீர் சுத்திகரிப்பு திறனை அறிந்து கொண்டு உடனடியாக மேல்

நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக அனைத்து மண்டல மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கும் தலா இரண்டு வீதம் பி.எச் (pH) அளவிடும் மானி (82 எண்ணிக்கை), கரைந்துள்ள மொத்த திடப்பொருட்களை (Total Dissolved Solids) அளவிடும் மானி (82 எண்ணிக்கை), மற்றும் ஜி.பி.எஸ் (GPS) கருவி (82 எண்ணிக்கை) ஆகிய கையடக்க கருவிகள் **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** ரூ.1.70 கோடி செலவில் வழங்கப்படும்.



## 10. தேனி மற்றும் ஊட்டியில் இயங்கும் உதவி சுற்றுச்சுழல் பொறியாளர் அலுவலகங்களை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களாக தரம் உயர்த்துதல்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இரண்டு மாவட்ட அலுவலகங்கள் உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் தேனி மற்றும் ஊட்டியில் இயங்கி வருகின்றன. மேற்கூறிய இரு அலுவலகங்களின் உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்கள், பிற மாவட்ட அலுவலகங்களை போலவே, மாவட்டத்தின் அனைத்து தொழிற்சாலைகளையும் ஆய்வு செய்து இசைவாணை வழங்குவதோடு மாவட்ட அளவில் நடைபெறும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கூட்டங்களுக்கும், மாவட்ட அளவில் வருகை

தரும் சட்டமன்ற ஆய்வு குழுக்களுக்கும் உரிய அறிக்கையினை அளிப்பதோடு அக்குழுவுடன் ஆய்வு பயணமும் மேற்கொள்கின்றனர். இவர்கள் பதிலறிக்கை வழங்கும் பொழுது சட்டமன்ற குழு உறுப்பினர்கள், செயற்பொறியாளர் தலைமையில் உள்ள அதிகாரிகளிடமிருந்து அறிக்கையினை எதிர் பார்க்கின்றனர். ஆகவே, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** நடப்பு நிதியாண்டில் சுமார் ரூ.0.30 கோடி செலவில் தேனி மற்றும் ஊட்டியில் உள்ள உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இயங்கும் இவ்விரு அலுவலகங்களிலும், 2 மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் பதவிகளை ஏற்படுத்தி, சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இயங்கும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகமாக தரம்



உயர்த்தப்படும். இதன் மூலம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனைத்து மாவட்ட அலுவலகங்களும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இயங்கும்.

**தோப்பு என்.டி.வெங்கடாச்சலம்**

அமைச்சர்–சுற்றுச்சூழல்